**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>**

**<u>O.S.No.75/2023</u>**

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | சரஸ்வதி |
| தகப்பனார் / கணவர் | .. | அருண்குமார் |
| வயது | .. | 30 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | மேல்மா கிராமம் |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் வியாழக்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பி.இ முடித்துள்ளேன். வாக்குமூலம் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளதை படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து குறித்தான முழு விவரம் தெரியாது, ஓரளவுக்கு தெரியும். கோவிந்தராஜ் பற்றி தெரியுமா என்றால் தெரியும். அவர் என்னுடைய தாத்தா. அவர் முதல் மனைவி பெயர் எல்லம்மாள், அவர்களுக்கு குழந்தை இல்லை என்றால் சரிதான். ரங்கநாயகி அம்மாளை இரண்டாவதாக கோவிந்தராஜ் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். ரங்கநாயகி, கோவிந்தராஜ் தம்பதியருக்கு லட்சுமி, ராஜேஸ்வரி இரண்டு பெண்பிள்ளைகள். ரங்கநாயகி என்பவர் முதலில் காலமாகிவிட்டார். ரங்கநாயகி இறக்கும் போது லட்சுமி, ராஜேஸ்வரி ஆகியோருக்கு என்ன வயது இருக்கும் என்றால் என் அம்மா சொல்லி தெரியும். லட்சுமி, ராஜேஸ்வரி ஆகியோர் தான் சொத்தை பராமரித்து வருகிறார்கள். அருண்குமார் என் கணவர். எல்லம்மாள் என் கணவருக்கு எழுதி வைத்த சொத்தை விற்றுவிற்றா என்றால் அது பற்றி தெரியாது, ஆனால் எல்லம்மாள் எழுதி வைத்த விவரம் தெரியும். என் கணவர் விற்றுவிற்ற விவரம் எனக்கு தெரியும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தும், எல்லம்மாள் அருண்குமாருக்கு எழுதி வைத்த சொத்தும் கோவிந்தராஜ் பிள்ளை பெயரில் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். கோவிந்தராஜ் பிள்ளை இறக்கும் வரையில் எந்த ஒரு ஆவணம் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். கோவிந்தராஜ் பிள்ளை இறந்த பிறகு எல்லம்மாள், ராஜேஸ்வரி மற்றும்

லட்சுமி ஆகியோர்களை தன் பிள்ளைகளாக வளர்த்து வந்தார்கள் என்றால் சரிதான். கோவிந்தராஜ் பிள்ளை காலமான பிறகு எல்லம்மாள், ராஜேஸ்வரி மற்றும் லட்சுமி ஆகியோர் அனுபவித்து வந்தனர் என்றால் சரிதான். எல்லம்மாள் மற்றும் லட்சமியும் சேர்ந்து 3 ல் 2 பாகம் 28.05.2008 ல் என் அம்மா ராஜேஸ்வரியிடம் ரூ.3,00,000/- பெற்றுக்கொண்டு ஒரு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரிதான், சர்வே எண்.426 தவறுதலாக என் தந்தை பெயரில் உள்ளதை ராஜேஸ்வரியிடம் ரூ.3,00,000/- பெற்றுக்கொண்டு ஒரு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்தபோது தவறுதலாக மேற்படி விடுதலை பத்திரத்தில் சேர்த்துவிட்டார்கள். என் அப்பா 17.11.2005 இல் இறந்தார். எல்லம்மாள் விடுதலை பத்திரத்தில் எழுதிக்கொடுத்த போக 3 ல் 1 பாகம் என் கணவருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி விவரங்கள் எனக்கு 2008 ஆண்டே தெரியுமா என்றால் தெரியும். ராஜேஸ்வரிக்கு விடுதலை பத்திரம் மூலம் வந்த சொத்தினை அவரது மகளான 1ம் பிரதிவாதி ஈஸ்வரி பெயரில் 09.03.2017 ஆம் தேதியன்று தான செட்டில் மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தது தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வீரராகவன், என் மீது போடப்பட்டுள்ள அசல் வழக்கு எண்.64/2017 என்ற வழக்கில் மேற்படி விவரம் தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான், ஆனால் விவரம் தெரியாமல் சாட்சியம் அளித்துவிட்டேன். ஈஸ்வரி தன் கணவர் வீரராகவன் பெயரில் 17.03.2017 ல் தான செட்டில் மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் 2022 ல் தான் எனக்கு தெரியும். ஆனால் அசல் வழக்கு 64/2017 வழக்கில் பத்திரம் எழுதி ஒரு வாரத்தில் தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளேன், ஆனால் 2022 ல் தான் தெரியும். 03.04.2017 அன்று எல்லம்மாள், என் கணவர் அருண்குமாருக்கு விற்பனை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி விவரங்கள் சம்பந்தமாக தாவாவில் சொல்லவில்லை, ஆவணங்களும் அதற்காக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2017 முதல் தற்போது வரை தாவா சொத்தை வீரராகவன் தான் அனுபவித்து வருகிறார் என்றால் அந்த இடத்தில் அவரும், நானும் பயிர் செய்து வருகிறோம். நான் பயிர் செய்யும் அளவுஎவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் அங்கு பயிர் வைக்கவில்லை என்றால் நான் பயிர் வைத்து அறுவடை செய்துள்ளேன். நான் பயிர் செய்வதற்கும், அறுவடை செய்வதற்கும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து வீரராகவன் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 21.03.2017 ஆம் முதல் வீரராகவன் வழக்கு சொத்து அனுபவித்து வருவதாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் ஞாபகம் இல்லை. வீரராகவன் என் மீது வழக்கு போடப்பட்ட வழக்கின் விவரம், எதற்கு என்று விவரம் என்றால் தெரியாது. வீரராகவன்

2017 ல் வழக்கு போட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் எனக்கு தெரியாது. தாவா சொத்து முழுக்க முழுக்க 2ம் பிரதிவாதி வீரராகவனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. 2017 ல் ஆவணங்கள் குறித்து தெரிந்துள்ள நிலையில் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. என் அக்கா ஈஸ்வரி கடந்த மூன்று வருங்களாக என்னுடன் தான் இருக்கிறார். ஈஸ்வரி காணாமல் போனதாக 2ம் பிரதிவாதிவழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி வீரராகவனின் மனைவி ஈஸ்வரியை நாங்கள் தான் கடத்தி வைத்துள்ளோம் என்றால், அவர் விருப்பப்படி தான் வந்தார். இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**